RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt224s22268

OPEN ACCESS

# பாலகுமாரனின் துணை நாவலில் மனிதநேயம்

**ஆ. விக்டோரியா [அ, *], ஜே. சரோஜினி [அ]**

[அ] தமிழ்த்துறை, சாராள் தக்கர் கல்லூரி (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்துடன் இணைவு பெற்றது), திருநெல்வேலி-627012, தமிழ்நாடு, இந்தியா

# Humanity in Balakumar's Tamil novel Thunai

**A. Victoria [a, *], J. Sarojini [a]**

[a] Department of Tamil, Sarah Tucker College (Affiliated to Manonmaniam Sundaranar University), Tirunelveli-627012, Tamil Nadu, India

* Corresponding Author: victoriastc@gmail.com

Received: 08-09-2022
Revised: 17-11-2022
Accepted: 24-11-2022
Published: 05-12-2022

Check for updates

**ABSTRACT**

Tamil literature portrays the major problems that occurs in the society. Especially Tamil novels explains all about these in detail. Writer Balakumar is one of the leading authors of such novels. His works are records of the problems seen in the society. People's lack of intolerance, lack of individual morality and lack of humanity are the main causes for the problems that occurs in society. In this way, he has written many novels emphasizing humanity and insist that humanity is very important in a society. should be found in today's society. Thunai is one among the novel this article examines the humanity that has been described in this novel.

**Keywords:** Humanity, Thunai, Morality, Balakumar

## முன்னுரை

தமிழ் இலக்கிய உலகில் சமூகத்தில் காணும் பிரச்சினைகளைப் படம்பிடித்துக் காட்டும் இலக்கியமாக இன்றைய இலக்கியங்கள் விளங்குகின்றன. குறிப்பாக நாவல்கள் விளங்குகின்றன. அத்தகைய நாவல் படைப்பாளர்களில் முன்னணி எழுத்தாளர்களில் முக்கியமாக விளங்குபவர்களில் எழுத்தாளர் பாலகுமாரனும் ஒருவர் ஆவார். அவருடைய படைப்புகள் சமூகத்தில் காணும் பிரச்சினைகளின் பதிவுகளாக விளங்குகின்றன. மக்களிடம் காணும் சகிப்புத்தன்மையின்மை, தனிமனித ஒழுக்கமின்மை, மனிதநேயமின்மை ஆகியவையே சமூகத்தின் பிரச்சினைகளுக்கு முக்கியக் காரணங்கள் ஆகும். அவ்வகையில் இன்றைய சமூகத்தில் இத்தகைய மனிதநேயம் காணப்பெறவேண்டும் என்பதை வலியுறுத்தி பல நாவல்களைப் படைத்துள்ளார். அவர் படைத்துள்ள பல்வேறு நாவல்களுள் துணை நாவலும் ஒன்றாகும். இந்நாவலில் பதிவுசெய்யப் பெற்றுள்ள மனிதநேயம் குறித்து இக்கட்டுரை ஆராய்கின்றது.

## நாவலின் கதைச்சுருக்கம்

நாவலின் தலைவி வசந்தி ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவள். அவளுக்கு மூன்று சகோதரிகள் உண்டு. மொத்தம் நான்கு பெண் குழந்தைகள் என்பதால், வசந்தியின் அப்பா அவளின் அம்மாவை நான்கு பெண் குழந்தைகளைப் பெற்றுவிட்டாய் என்று அடிக்கடி கூறிக்கொண்டிருந்தார். தன் அம்மாவை இவ்வாறு திட்டுவாங்குவதை நினைத்து பல நாட்கள் வருத்தமடைந்து படித்துப் பெரியாளாக

வரவேண்டும் என்று ஒரு வெறியோடு படிக்கிறாள். அவ்வாறு படித்ததின் விளைவு நியூயார்க் ஏர் இண்டியாவில் வேலை கிடைக்கிறது. அதன்பின், நியூஜெர்சிக்கு மாற்றப்பட்டு ஏர் டிரா.்பிக்-கில் வேலை செய்துவருகிறாள். இங்கு வேலை கிடைப்பதற்கும் என் திறமை, என் கெட்டிக்காரத்தனம், என் புத்திசாலித்தனம் தான் காரணம் என்பதை வசந்தியின் கூற்றாக நாவலாசிரியர் விளக்கியுள்ளார். அவள் வேலை பார்த்துத் தன் தங்கைகளையும் படிக்க வைத்துவிட்டாள். அவர்களுக்கு வேலை கிடைத்து நல்லநிலையில் அவளின் குடும்பம் இருக்கிறது.

ரவி சுப்பிரமணியன் நியூயார்க்கில் தன் பெற்றோர், மனைவி, பிள்ளைகளுடன் வாழக்கூடிய சந்த்ருவின் நண்பர். ரவி சுப்பிரமணியன், தன் நண்பர் சந்த்ருவிடம் பெற்றோர், மனைவி, பிள்ளைகள் ஆகியோர்களுடன் கூட்டுக்குடும்பமாக வாழவேண்டும் என்பதை இருவரின் உரையாடல் மூலம் விளக்குகிறார் நாவலாசிரியர்.

சந்த்ரு திருமணம் செய்துகொள்ளவேண்டும் என்று மும்பை வருவதற்கு நியூஜெர்சிக்கு வருகிறான். மும்பைக்குப் புறப்படும் விமானம் இயந்திரக் கோளாறு ஏற்படுகின்றது. அப்போது சந்த்ரு வசந்தியைத் தற்செயலாக சந்திக்கிறான். அங்கு வெளிநாட்டில் பணிபுரிபவர்கள் திருமணம் செய்துகொள்வதற்கு எத்தகைய சிக்கல்கள் இருக்கின்றன. வெளிநாட்டில் வாழ்பவர்களின் திருமணம் என்பது வாழ்க்கை நிலைத்திருப்பதில்லை. திருமண வாழ்க்கை முறிந்துவிடுகின்றது. இதனை வசந்தி, சந்த்ருவின் உரையாடல் வழி வெளிப்படுத்துகிறார் நாவலாசிரியர்.

வசந்தி படித்து தன் குடும்பத்தின் வளர்ச்சிக்கு காரணமாக இருந்ததால் அவளின் குடும்ப வாழ்க்கைக்கு உன் கணவரை நீயே தேர்வு செய்துகொள் என்று அவளைச் சுதந்திரமாக விட்டு விடுகிறார்கள். சந்த்ரு சென்னை வந்து தங்கள் உறவினர்கள் வழியில் பல பெண்களைப் பார்க்கின்றான். ஆனால் அவனுக்கு இந்தப் பெண்கள் யாரும் பிடிக்கவில்லை. தந்தை தன் மகன் படிக்கும் காலங்களில் தனக்கு உதவி செய்த நண்பர் விஜயராகவனின் பெண்ணைத் திருமணம் செய்யுமாறு வற்புறுத்துகிறார். சந்த்ரு பணம் கொடுத்து உதவியதற்காக என் வாழ்க்கையைத் தொலைக்க முடியாது என்று மறுத்துக் கூறிவிடுகின்றான். பிற பெண்களையும் பல காரணங்களால் தவிர்த்து விடுகின்றான். டாக்டர் சின்னச்சாமி அமெரிக்காவில் இருந்து தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு பணிக்கு வருமாறு அழைக்கின்றார். உடனே புறப்பட்டுச் சென்றுவிடுகின்றான். நியூஜெர்சிக்குச் சென்று வசந்தியைச் சந்திக்கின்றான். அங்கு வசந்தி, சந்த்ருவின் திருமணம் பற்றி விசாரிக்கின்றாள். பெண் கிடைக்கவில்லையெனக் கூறிவிட்டு, வசந்தியைத் திருமணம் செய்துகொள்வதாகக் கூறுகின்றான். அவளும், அவனைத் திருமணம் செய்துகொள்வதற்கு சம்மதம் தெரிவிக்கின்றாள் என்று நாவலாசிரியர் நாவலை முடித்துள்ளார். இந்நாவல் மனிதநேயத்தையும், பெண்ணியச் சிந்தனையையும் புலப்படுத்துவதாக அமைந்துள்ளது.

## நாவலின் கதாபாத்திரங்கள்

தலைவன் சந்த்ரு, தலைவி வசந்தி, ரவி சுப்ரமணியன் நியூஜெர்சியில் தன் பெற்றோர், மனைவி, பிள்ளைகளுடன் வாழக்கூடிய சந்த்ருவின் நண்பர். வசந்தியின் அமெரிக்க நண்பர். அண்ணன், அண்ணன் மனைவி சரஸ்வதி, அக்கா கோமதி, அக்காவின் கணவர், தங்கை கற்பகவல்லி, தம்பி, சொர்ணலதா (அண்ணியின் தங்கை), சுமதி (சந்த்ருவிற்கு அம்மா பார்த்தபெண்), விஜயராகவன், டாக்டர் சின்னச்சாமி, டாக்டர் பழனிச்சாமி, டாக்டர் பல்ராம், டாக்டர் நாயர், காஞ்சி பெரியவர் ஸ்ரீஜெயேந்திரர் ஆகியோர் இந்நாவலின் கதாபாத்திரங்கள் ஆவர்.

## நாவலின் கதைக்களங்கள்

சென்னை, மயிலாப்பூர், அமெரிக்கா, நீயூயார்க், நீயூஜெர்சி, பிட்ஸ்பெர்க், நங்காநல்லூர், அபிராமபுரம், பெசன்ட் நகர், ரத்னகிரீஸ்வரர் கோவில், காஞ்சிபுரம் (காஞ்சி பெரியவர் மடம்) ஆகிய இடங்கள் இந்நாவலின் கதைக்களங்களாக விளங்குகின்றன.

## மனிதநேயம்

பசித்தோருக்கு உணவு வழங்கிப் பசியைப் போக்குபவன். இரப்போருக்கு இல்லை என்று கூறாமல் உதவி செய்பவன். ஒருவனுக்குப் பாதிப்பு ஏற்படாமல் நீதி, நேர்மையுடன் நடந்து கொள்பவன். ஒருவனின் துன்பத்தைப் போக்குபவன். சாதி, மதம், நாடு என்று வேறுபாடு இல்லாமல் தன்னலமின்றி பிறர்நலம் பேணுபவன். சமூகத்தில் அறச்செயல்களைச் செய்பவன். இத்தகைய பண்பு நலன் கொண்டவனே மனிதநேயம் உள்ளவனாகக் கருதப்படுகிறான். மனிதநேயம் உள்ளவனின் பண்புகளை இலக்கியங்கள் வலியுறுத்துகின்றன. இவற்றிற்கு நற்றிணைப் பாடலைச் (160:1-3) சான்றாகக் கொள்ளலாம் (Balasubramaniyan, 2007).

"நயனும், நண்பும் நாணு நன்கு உடைமையும்

பயனும் பண்பும் பாடு அறிந்து ஒழுகலும்

நும்மினும் அறிருவென் மன்னே"

என்ற பாடல் அடிகள் அனைவரிடமும் கலந்து வாழும் உறவு, சுற்றம் தழுவல், இரப்பதற்கு நாணுதல், குறையாத ஈகைத்தன்மை, தீயசெயல்களைக் கண்டவிடத்து அச்செயலில் உள்ளம் செல்லாதவாறு நன்னெறியில் செலுத்துதல், உலக நடையறிந்து வாழ்தல் என்ற ஆறு பண்புகளையும் கொண்டவனை மனிதநேயம் உள்ளவனாகக் கொள்ளலாம். பசித்தோருக்கு உணவு வழங்கிப் பசியைப் போக்குபவன். இரப்போருக்கு இல்லை என்று கூறாமல் உதவி செய்பவன். ஒருவனுக்குப் பாதிப்பு ஏற்படாமல் நீதி, நேர்மையுடன் நடந்துகொள்பவன். ஒருவனின் துன்பத்தைப் போக்குபவன். சாதி, மதம், நாடு என்று வேறுபாடு இல்லாமல் தன்னலமின்றி பிறர்நலம் பேணுபவன். சமூகத்தில் அறச்செயல்களைச் செய்பவன். இத்தகைய பண்பு நலன் கொண்டவனே மனிதநேயம் உள்ளவனாகக் கருதப்படுகிறான். மனிதநேயம் உள்ளவனின் பண்புகளை இலக்கியங்கள் வலியுறுத்துகின்றன. "அன்பும் அறமும் பின்னிப் பிணைந்த ஓர் உணர்வே மனிதநேயமாகும்" என்கிறார் மதியழகி (Mathiyazhagi, 2016). இத்தகைய மனிதநேயம் குறித்து பாலகுமாரனின் துணை நாவலில் காணமுடிகின்றது.

## இயற்கை மீது கரிசனை

பொதுவாக இலக்கியங்களில் அஃறிணைப் பொருட்களை உயர்திணைப் பொருட்களாகப் பாவித்துப் புலவர்கள் பாடுவது மரபு. இதனைச் சங்கப் பனுவல்களில் காணமுடிகின்றன. அதேபோல், நவீன இலக்கியங்களிலும் அஃறிணைப் பொருட்களை உயர்திணைப் பொருட்களாக மனிதநேயத்துடன் படைப்பாளர்கள் புனைந்துள்ளதைக் காணமுடிகின்றன. இதனைப் பாலகுமாரன் நாவலிலும் காணமுடிகின்றது.

"அரசாங்க சிப்பந்திகளுக்கெல்லாம் இந்த ஆறு தனக்கு உடன் பிறப்பு போல அத்தனை கரிசனமாய் பாதுகாக்கிறார்கள்"

என்று நாவலாசிரியர் குறிப்பிட்டுள்ளார் (Balakumaran, 2016). அமெரிக்கர்கள் இயற்கையையும், சுற்றுச் சூழலையும் பாதுகாக்கும் பண்புள்ளவர்கள். மரம், செடிகளிலும், ஆற்றிலும் மாசு ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் கவனமாக இருக்கிறார்கள். ஆற்றினைத் தன் உடன்பிறப்புப் போன்று பாதுகாக்கின்றார்கள் என்று விளக்கியுள்ளார். இங்கு இயற்கையின் மீது கரிசனை காணப் பெற்றதைக் காணமுடிகின்றது. இது மக்கள் இயற்கையைப் பாதுகாக்க வேண்டும். அதற்கு அவர்களிடம் மனிதநேயம் காணப்பெறவேண்டும் என்பதை நாவலாசிரியர் புலப்படுத்தியுள்ளார்.

## பொதுச்சொத்தின் மீது அக்கறை

அமெரிக்கர்கள் அனைவரும் பொதுச்சொத்தின் மீது மிகுந்த அக்கறை கொண்டவர்கள். வாழ்க்கையின் மீது கரிசனம் கொண்டவர்கள். அஃறிணைப் பொருட்களுக்குக்கூட தீங்கு நேரக்கூடாது என்று நினைப்பவர்கள். மனிதநேயம் மிக்கவர்கள் என்பதை,

"இது அமெரிக்கா. இந்த மக்களுக்கு எதனாலேயே ஒரு ஒழுக்கம் பலமாய் ஏற்பட்டுவிட்டது. எல்லோருக்கும் பொதுவான சொத்தின் மீது மிகுந்த அக்கறை இருக்கிறது. வாழ்க்கையின் மீது கரிசனம் இருக்கிறது. சகலரும் நலமாக இருக்கவேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. தனியார் துறையோ அரசாங்கமோ கை நீட்டிக் காசு வாங்குகிறோம். அதற்குண்டான வேலை செய்யவேண்டும் என்கிற மகத்தான பொறுப்பு இருக்கிறது. நேர்மை இருக்கிறது" என்ற மனிதநேயப் பண்பை வெளிப்படுத்தி, இது இந்தியாவில் இந்நிலை காணப் பெறவில்லை (Balakumaran, 2016). இடையறாது ஏமாற்றுதலே வாழ்க்கையின் நெறியாகக் கொண்டவர்கள். இவர்களிடம் அரசு சொத்துக்களின் மீதோ அல்லது தனியார் சொத்துக்களின் மீதோ அக்கறையும் கரிசனமும் கிடையாது. அமெரிக்கர்களிடம் மகத்தான பொறுப்பும், நேர்மையும் மனிதநேயமும் காணப்பெறுகின்றது என்பதைப் படைப்பாளர் புலப்படுத்தியுள்ளார்.

## உயிரைக் காப்பாற்றுதல்

சந்த்ரு விமானம் மூலம் மும்பைக்குச் செல்வதற்கு நியூஜெர்சி செல்கிறான். விமானத்தில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டுவிடுகிறது. விமானம் புறப்படுவதற்கு 16-மணி நேரம் ஆகும் என்கின்றனர். இதனால் விமானம் நிலையம் வந்தவர்கள் அனைவரும் கோபமாகப் பேசுகின்றனர். உனக்கு நேரத்தின் அருமை தெரியுமா? என்றெல்லாம் கோபமாகக் கேட்கிறார்கள். அதற்கு, அவர்களுடைய கேள்விக்கு,

"டிக்கெட் கௌண்டரில் இருந்த பெண், எனக்கு நேரத்தின் அருமையும் தெரியும். உயிரின் அருமையும் தெரியும். உங்களை ஒரு மோசமான விமானத்தில் ஏற்றிவிட்டு எங்கேனும் தலைகுப்புற விழுவதைவிட தாமதமாகப் போவது நல்லதல்லவா?" என்று நேரத்தின் அருமை என்பதைவிட உயிரின் அருமை மிகவும் முக்கியமானது என்று டிக்கெட் கவுண்டரில் உள்ள பெண் கோபமாகக் கூறிக்கொண்டிருந்தார் என்று நாவாசிரியர் பதிவுசெய்துள்ளார். இது விமானத்தில் செல்பவர்களின் உயிர் முக்கியம் என்பதைப் புலப்படுத்தியிருப்பது மனிதநேயத்தை வெளிப்படுத்தியிருக்கிறது (Balakumaran, 2016).

## தனிமனித ஒழுக்கம்

மனிதனின் வாழ்க்கை என்பது தனிமனித ஒழுக்கம் சார்ந்ததாக இருக்கவேண்டும். ஆனால், இன்று மக்கள் அவ்வாறு வாழ்வது இல்லை. தவறு செய்கிறோம். அதற்காக வெட்கப் படுவதில்லை. தெருவில் பூசணிக்காய் உடைப்பதற்கு, கெட்ட வார்த்தைகளைப் பயன்படுத்துதற்கு, கட்சி மாறுவதற்கு, கொள்கையை இழப்பதற்கு, அடுத்தவர்களுக்கு ஏதேனும் தொந்தரவு செய்துவிட்டால், ஐயோ தொந்திரவு செய்துவிட்டோமே அவர்கள் துன்பப்படுவார்கள் என்று சிந்தித்துப் பார்ப்பதில்லை என்பதை,

"ஒலி பெருக்கியை பேய் மாதிரி அலற வைத்துவிட்டு வீட்டு வாசலில் பாட்டுப் போடுவார்கள். பக்கத்து வீட்டுக்காரன் என்ன கதி ஆவான் என்று அவர்கள் சிந்திப்பதேயில்லை. அவன் வந்து சொன்னால் அப்படியா உனக்கு தொந்திரவு செய்து விட்டேனா? என்று வெட்கப்படுவதில்லை. அப்படித்தான் போடுவோம். போடா என்று சொல்கிறார்கள்"

என்று நாவலாசிரியர் பதிவுசெய்துள்ளார். தான் தவறு செய்துவிட்டோம் என்று சிந்திப்பதில்லை. அடுத்த வீட்டுக்காரர்களுக்குத் தொந்தரவு செய்யாமல் இருக்கவேண்டும் என்ற தனிமனித ஒழுக்கம் தமிழர்களிடம் காணப்பெறுவதில்லை. தமிழர்களிடம் மனிதநேயம் இல்லை என்பதை நாவலாசிரியர் பதிவுசெய்துள்ளார் (Balakumaran, 2016).

## சுங்கம் வசூலிப்பதில் மனிதநேயம்

சந்த்ரு வந்து அமெரிக்காவிலிருந்து சென்னைக்கு வருகின்றான். இந்தியாவிற்குள் நுழைந்து விட்டதற்கான முத்திரையை வாங்கிக் கொண்டார்கள். பெட்டிகளுக்கு காத்திருந்தான். வந்த பெட்டிகளை ட்ராலிகளில் அடக்கிக் கொண்டு போய் கஸ்டம்ஸ் ஆபீஸ் எதிரில் நின்றான். அப்போது சுங்கம் வசூலிக்கூடிய அதிகாரிகள் சந்த்ருவிடம்,

“சுங்கம் வசூலிக்கக்கூடிய பொருட்கள் வைத்திருக்கிறீர்களா? வேறு ஏதேனும் கருவிகள் இருக்கின்றனவா? ஒரு சிடி பிளேயர் இருக்கிறது. இது என் தாயாருக்கு பரிசாகத் தரப்பட்டது இதை எடுத்துக்கொண்டு போகிறேன். ‘ஆடியோவ’, ‘வீடியோவா’, ‘ஆடியோ’ நல்லது. வாங்கி புரட்டிப் பார்த்தான். பைக்குள் போட்டான். போய் வாருங்கள் கஸ்டம்ஸ் ஆஃபீஸர் அவனை நகர்த்தினார். வேறு சோதனை தேவையில்லையா? என்று அவன் வியப்போடு கேட்டான். கஷ்டப்பட்டு அமெரிக்காவில் உழைத்து இங்கு வந்திருக்கிறீர்கள். உங்களை எதற்குச் சோதனையிட? உழைக்காமல் பலபேர் உல்லாச வாழ்க்கை அனுபவித்துக் கொண்டிருக்கும்பொழுது உழைக்கின்ற நீங்கள் கூடுதலாக நான்கு பொருள் எடுத்துக்கொண்டு போனால் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. போங்கள். நகர்ந்து போங்கள். சீக்கிரம் போங்கள் என்று துரிதப்படுத்தினார்”

என்று நாவலாசிரியர் கூறுகின்றனர். இங்கு உழைக்காமல் பலர் உல்லாச வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். உழைக்கின்ற நீங்கள் நான்கு பொருட்களையும் கொண்டு சென்றால் என்ன? என்று கூறுவது சுங்க அலுவலர்களின் மனித நேயத்தை உணர்த்துகின்றன (Balakumaran, 2016).

## சந்த்ருவின் மனிதநேயம்

‘துணை’ நாவலின் தலைவன் சந்த்ருவின் செயல்பாடுகளை மனிதநேயத்துடன் படைத்துள்ளார் நாவலாசிரியர். பணம் வாங்காமல் நோயைக் குணத்துதல், பணிபுரியும் இடங்களில் மனிதநேயத்துடன் செயல்படவேண்டும். கோவில்களுக்கும், அடியார்களுக்கும் இறைப்பணி செய்வதற்கு உதவவேண்டும். தாய் தவறு செய்தாலும் அவள் செய்யும் தவறைச் சுட்டிக் காட்டவேண்டும் ஆகிய செயல்பாடுகளில் சந்த்ருவின் மனிதநேயம் வெளிப்பட்டுள்ளது புலப்படுகின்றது. அவை குறித்து இங்கு ஆராயப்பெற்றுள்ளன.

## நோயைக் குணப்படுத்துதல்

வசந்தியின் அமெரிக்க நண்பர் வயிறு கோளாறு, வாயு, கைகால் குடைச்சல் ஆகியவற்றால் மிகவும் சிரமப்பட்டான். அதிகம் உண்பதால் ஏற்படும் பிரச்சினை. எழுந்து வேலை செய்யமுடியாமல் ஒரு மூச்சுத் திணறலோடு உட்கார்ந்திருந்தான். வசந்தி அவளைச் சரிசெய்ய முடியுமா? இறந்துவிடுவாரோ என்கிற பயம் சில சமயம் ஏற்படுகிறது என்று சந்த்ருவிடம் கூறினாள். வசந்தி கூறியதற்காக, அவளின் அமெரிக்க நண்பரின் நோயைக் குணப்படுத்திவிட்டான். ஆதலால் ‘என்ன பீஸ்’ என்று அவன் கேட்கிறான். அதற்குச் சந்த்ரு,

“இவர் எங்கள் ஊர்ப் பெண். இவளுக்கு பாதுகாப்பாக இரு. அதுபோதும். நீ இருக்கிறாய் என்பதாலேயே இந்த அன்பளிப்பு செய்யும்படி எனக்கு எண்ணம் வந்தது” என்று சந்த்ரு பதில் சொன்னான்”

என்று நாவலாசிரியர் சுட்டுகின்றார் (Balakumaran, 2016). ஒரு பெண் தன்நாட்டைவிட்டு, அடுத்த நாட்டில் பெற்றோர்கள், சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்கள் யாருமே இல்லாமல், தனியாக இருக்கிறாள். அவளுக்குப் பாதுகாப்பிற்கு என ஒருவர் தேவை என்பதை உணர்ந்த சந்த்ரு, வசந்தியின் அமெரிக்கரின் நண்பரின் நோயைக் குணப்படுத்தி, அதற்கான கட்டணத்தைப் பெறாமல் வசந்திக்குப் பாதுகாப்பாக இருந்தால்போதும் என்று கூறுகின்றான் என்று நாவலாசிரியர் பதிவுசெய்துள்ளது சந்த்ருவின் மனிதநேயத்தைப் புலப்படுகின்றது.

## பணிபுரியும் மருத்துவமனையில் மனிதநேயம்

சந்த்ரு நீயூயார்க்கில் பணிபுரியும் மருத்துவமனையில் காலம் நேரம் பார்க்காமல் பணிபுரிவதும், உடன் பணிபுரியும் டாக்டர்கள் தாமதமாக வந்தால் அவர்கள் வரும்வரை பணிபுரிவதையும் வழக்கமாகக் கொண்டவன் என்பதை,

“ஒரு மணி நேரம் தூங்கிட்டு மொத்த மணி நேரமும் வேலை செய்திருக்கேன் எங்க ஆஸ்பத்திரி என்னை கொண்டாடறதுக்கு காரணமே நான் எப்பப்போ கூப்பிட்டாலும் வருவேங்கறதுதான் நான் டிராபிக் ஜாம்ல மாட்டிக்கிட்டேன் இன்னும் இரண்டு மணி நேரம் கூட்டி கண்ணீர் பற்றா நான் மருந்தாகவே மாட்டேன் சரி மெல்லவே ஆசைப்படாதவர் நிதானமாக வா என்று பதில் சொல்லுவேன் அந்த அமெரிக்க டாக்டர் ஆடிப் போயிடுவான் அது வந்து கொஞ்சம் கொஞ்சம் கொஞ்சுவான் நான் சாதாரணமாக எடுத்துண்டு வெளியே போயிடுவேன். அது ஆச்சிரியம்” என்று சந்த்ரு பற்றி நாவலாசிரியர் பதிவுசெய்துள்ளார் (Balakumaran, 2016). இது சந்த்ருவின் மனிதநேயத்தை வெளிப்படுத்துகின்றது.

## வெள்ளி ரதத்திற்கு நிதி வழங்குதல்

சந்த்ருவும் அவன் தந்தையும், ரத்னகிரீஸ்வரர் கோவிலுக்குச் சென்று தெய்வத்தை வணங்கிவிட்டு வருகின்றனர். அப்போது கோவில் பொறுப்பாளர் கோவிலுக்கு வெள்ளி ரதம் வாங்கவேண்டும் என்கிறார்.

““அப்படியா வெள்ளி ரதம் எவ்வளவு ஆகும்?” “அது ஆகும் பல லட்சம்.” காசு கலெக்ட் பண்ண ஆரம்பிச்சுட்டேளா….?” “இப்போதுதான் நூறும், அம்பதுமா வாங்கிண்டிருக்கேன்.” “நான் பத்தாயிரம் ரூபாதரேன்.” அவன் நெஞ்சில் கைவைத்துச் சொன்னான். அதை மாத்தி ஒரு லட்சம்னு”

கூறுகின்றான். இது கோவிலுக்கு எதாவது செய்யவேண்டும் என நினைத்து ஒரு லட்சம் கொடுத்தது சந்த்ருவின் மனிதநேயத்தை வெளிப்படுத்துகிறது (Balakumaran, 2016).

## காஞ்சி மடத்திற்கு நிதி உதவி வழங்குதல்

சந்த்ரு புதிதாகக் கார் வாங்கியபோது, தன் குடும்பத்தோடு காஞ்சிபுரம் மடத்திற்குச் ஸ்ரீஜெயந்திரரைப் பார்க்கச் செல்கின்றான். அங்குக் காஞ்சிப் பெரியவரைச் சந்தித்தபின் அந்தக் காஞ்சி மடத்திற்கு நிதி உதவி வழங்குகிறான். இதனை,

“ஒரு ஞாயிற்றுக்கிழமை மன்னியும், தம்பியும் மோட்டார் சைக்கிள் வர. பெண்கள் வண்டியில் உட்கார்ந்துகொள்ள அப்பா முன்னே இருக்க வண்டி காஞ்சிபுரம் நோக்கிப் போயிற்று. மடத்துக்குப்போய் அவர்களின் குலகுருவான காஞ்சிப் பெரியவரை நமஸ்காரம் செய்தார்கள். அங்கே இருக்கின்ற பெரியவாள் ஸ்ரீஜெயேந்திரரோடு பேசினார்கள். கிட்டத்தட்ட அமெரிக்கா வாழ் தமிழர்கள் அறுபது பேரை அவருக்குத் தெரிந்திருந்தது. நடுநடுவே கிண்டலான பேச்சுகளும் சுவையான கதைகளும் சொல்ல அவர் பேச்சை சந்த்ரு ரசித்தான். மடத்திற்கு ஐந்தாயிரம் ரூபாய் நன்கொடை கொடுத்தான்”

(துணை,70) என்று நாவலாசிரியர் பதிவுசெய்கிறார். இங்கு சந்த்ரு பெரியவர் ஸ்ரீஜெயேந்திரர் தன் மடத்திற்கு நிதி உதவி கொடு என்று கேட்காமலேயே சந்த்ரு காஞ்சி மடத்திற்கு நிதி உதவி வழங்கியது அவனின் மனிதநேயத்தை வெளிப்படுத்துகின்றது.

## தங்கையைப் படிக்க வைக்குமாறு கூறுதல்

சந்த்ருவின் தந்தை தன் மகள் கற்பகவல்லியைத் திருமணம் செய்து கொடுக்க நினைக்கின்றார். அவள் படிக்க விரும்புவதால் படிக்கவையுங்கள். திருமணம் இப்போது செய்து வைக்கவேண்டாம் என்று கூறியதை,

“படிக்கணும்னு ஆசைப்படறவா படிக்கணும்பா. படிக்க வேண்டாம்னு ஆசைப்படறவா படிக்கவேண்டாம். கோமதி படிக்கணும்னு ஆசைப்படலை. கல்யாணத்தை பண்ணிக் கொடுத்துடுன்னு வாயைத்திறந்து கேட்டா முடிச்சிட்டோம் இவ படிக்கறேங்கறபோது இவளுக்கு ஏன் கல்யாணம் பண்ணனும்”

என்று கூறுகின்றான் (Balakumaran, 2016). தன் தந்தை, தன் தங்கை கற்பகவல்லிக்குத் திருமணம் செய்து வைக்க முயற்சிக்கிறார். ஆனால் சந்த்ரு அவள் படிக்க விரும்புகின்றாள். ஆதலால் படிக்க வைப்போம் என்று அவளின் எதிர்காலம் கருதி மனிதநேயத்துடன் கூறுவதை நாவலாசிரியர் பதிவுசெய்துள்ளார்.

## தாயைச் சுட்டிக்காட்டுதல்

சந்த்ரு தன் அம்மா, தன்னுடைய அண்ணன் மனைவி சரஸ்வதியை எதற்கெடுத்தாலும் திட்டுகிறாள். அவனுடைய அண்ணன் மனைவியும் பதிலுக்குத் திருப்பித் திட்டுகிறாள். இவ்விருவருடைய பழக்கமும் பிடிக்கவில்லை. அதனால் இருவரும் செய்வது தவறு என்று சுட்டிக்காட்டுவதை,

"மன்னியை ரொம்ப அலட்சியமா நடத்தறேள்ம்மா. எனக்கு பிடிக்கறைல"

இங்கு தன் தாய் தன் அண்ணன் மனைவியை அலட்சியமாக நடத்துவது சந்த்ருவிற்குப் பிடிக்கவில்லை என்று கூறியது சந்த்ருவின் மனிதநேயத்தைப் புலப்படுத்துகின்றது (Balakumaran, 2016).

## சந்த்ருவின் தங்கையின் மனிதநேயம்

கோமதி தன் தம்பி சந்த்ருவிடம். தங்கை ஒரு பையனை விரும்புகின்றாள் என்று கூறுகின்றாள். இதை எப்படிக் கூறுகின்றாய் என்று தன் சகோதரியிடம் சந்த்ரு கேட்கின்றான். அதற்கு அவள், நம்ம வீட்டு வேலைக்காரி, நம் வீட்டிற்குப் பூ கொண்டு வந்து கொடுக்கும் பூக்காரி. பால்காரன் ஆகியோர் 'என்னம்மா நம்ம வீட்டு பாப்பா அந்தப் பையனோட போகுதே பார்த்தீர்களா தெரியுமான்னு கேக்குறாங்க' என்று கூறுகின்றாள்.

ஒரு மிகப்பெரிய பணக்காரப் பையனுக்கு முறையுள்ள பெண்கள் இருக்கிறார்கள். அந்தப் பணக்காரப் பையன் சிறியவனாக இருக்கும்போதே முறையுள்ள பெண்ணுடன் திருமணம் செய்து வைப்போம் என்று பேசி முடிவெடுத்துவிடுகிறார்கள். இவன் இறந்துவிடக்கூடிய ஒரு நோயாளி என்பதால் அந்தப் பெண்ணிற்கு வேறு ஒருவனுடன் திருமணம் செய்து வைத்துவிடுகிறார்கள். இதனை அவன் ஏற்றுக்கொள்கின்றான். அவன் மீதும் சந்த்ருவின் தங்கை மனிதநேயத்துடன் செயல்படுவதை,

"இவனுக்கு முறை இவனோட கல்யாணம் அப்படின்னு சின்ன வயசுலேயே அவா ஒரு பொண்ணா பேசி வச்சா. அந்தப் பொண்ணுக்கு போனமாசம்தான் கல்யாணம் ஆச்சு. அவா வீடு ரொம்ப கஷ்டப்பட்டது. இவன்தான் தைரியமா அதை சிரிச்சுண்டு இப்படித்தான் அப்படின்னு சொல்லிட்டு என் கூட சுத்திண்டிருந்தான். இந்த ஐந்து வருடங்களாக எந்த நம்பிக்கையில்லாமல் நாளைச் செத்துவிடுவேன்… நாளைச் செத்துவிடுவேன் என்று ஒருவன் வாழ்ந்திருப்பது சாதாரண விஷயமல்ல. அதன் வலி மிக அதிகம். வலியைச் சற்றுக் குறைக்கிறது. பெரிய உபகாரத்தை தங்கை செய்து கொண்டிருந்தாள்"

என்ற கருத்தின் மூலம் சமூகத்தில் எவ்வளவு பெரிய பணக்காரனாக இருந்தாலும் அவன் ஒரு நோயாளி எனத் தெரிந்துகொண்டால், அவனைச் சமூகம் புறக்கணித்து விடுகிறது அவ்வாறு புறக்கணிக்கப்பெற்ற, இறப்பு எப்போது என்றாலும் வரலாம் என்ற ஒருவன் மீது தன் தங்கை அன்பு வைத்துள்ளாள் என்பதைப் புரிந்துகொண்டுள்ளான் என நாவலாசிரியர் விளக்குகிறார் (Balakumaran, 2016). இது கற்பகவல்லியின் மனிதநேயத்தைப் புலப்படுத்துகின்றது.

## விஜயராகவனின் மனிதநேயம்

சந்த்ருவின் தந்தை சந்த்ருவிற்குப் பெண் பார்க்கிறார். அப்போது சந்த்ரு படிக்கும் காலங்களில் எந்த ஒரு எதிர் பார்ப்பும் இல்லாமல் கேட்கும்போதெல்லாம் கொடுத்துதவியவன் அவனின் நண்பன்

விஜயராகவன். அவனுக்கு ஒரு மகள் உண்டு. அவளை மகனுக்குத் திருமணம் செய்யலாமே என்று சந்த்ருவிடம் கேட்பதை,

“சந்த்ரு எனக்கொரு ப்ரெண்ட் விஜயராகவன்னு பேர். ஆரம்பத்துல என்கூட வேலை செய்து அப்புறம் வேற நல்ல கம்பெனிக்குப்போய் நிறைய சம்பாதிச்சான் கூடப் பழகின தோஷத்துக்காக அப்பப்போ நான் சிரமப்படற போதெல்லாம் எப்போ கேட்டாலும் கூட வஞ்சனை இல்லாத அஞ்சு, பத்து, ஐநூறு, ஆயிரம் தருவான். உன்னுடைய படிப்புக்காக அவன்கிட்டேயிருந்து நிறைய வாங்கியிருக்கேன். திரும்பிக் கொடுத்துருவேன். ஆனாலும் ஒரு வருஷக்கடன், ஒன்றரை வருஷக்கடனா மூவாயிரம், நாலாயிரம்னு வாங்கி வட்டியில்லாத திருப்பிக் கொடுப்பேன். வட்டி போட்டு கொடுத்துடறேன்னு சொல்லும்போது பிள்ளை படிப்புக்குன்னு சொல்ற நான் எப்படி வாங்குவேன். உனக்கு காசு கொடுத்த புண்ணியம் எனக்கு வட்டியா? வரட்டும் போதும் அப்படின்னுவான். திரும்பி எப்போ காசு கொடுப்பேன்னு கேட்கமாட்டான். காசு கொடுக்கற போது அடடா… இப்போ என்ன அவசரம்னுதான் சொல்லுவான்”

என்று சந்த்ருவின் தந்தை தன் மகனிடம் கூறுகிறார். இது சந்த்ருவின் தந்தை பிள்ளைகளைப் படிக்கவைப்பதற்குக் கஷ்டப்படுகின்றார் என்று ‘படிப்பிற்காகத்தானே’ என்று விஜயராகவன் கொடுத்து உதவுகிறான். இது அவனின் மனிதநேயச் செயலை வெளிப்படுத்துகின்றது (Balakumaran, 2016).

சந்த்ருவின் தந்தை, தன் நண்பன் விஜயராகவன் பணம் உதவியதற்கு நன்றிக் கடனாக விஜயராகவனின் பெண்ணைத் தன் மகன் சந்த்ருவிற்குப் பெண் கேட்பது சந்த்ருவின் தந்தையின் மனிதநேயச் செயலை உணர்த்துகின்றது.

## புண்ணியம் தேடுதல்

இன்றைய காலத்தில் பொதுவாக ஒரு இளைஞருக்குத் திருமணம் முடிந்தவுடன் அவள் கணவனின் பெற்றோர்கள் வயதானவர்கள் என்றெல்லாம் நினைப்பதில்லை. அவர்களை விட்டுவிட்டு தனிக்குடித்தனம் சென்றுவிடுகிறார்கள். இன்று கணவனின் பெற்றோர்களை விட்டுச்சென்றால் நாளைத் தன் மகனும், மருமகளும் தன்னையும் தன் கணவரையும் விட்டுச் செல்வார்கள் என்று நினைப்பதில்லை. இது சமூகத்தில் தற்போது நடந்து வருகின்றது என்பதை,

“கிழம் கொஞ்சம் பிடுங்கல்தான் என்ன பண்றது. அவருக்கு அம்மாவாச்சே, நாளைக்கு இப்படி நமக்கு ஒரு நிலைமை வரும்போது நம்மள யாராவது கவனிக்க வேண்டாமா? அந்த புண்ணியத்துக்காகவாவது நாம பண்ணித்தானே ஆகணும். அதுக்காக பண்றேன்”

(துணை, 98) என்று கூறுகின்றான். அதாவது நாளைக்கு நமக்கு இவ்வாறு ஒரு நிலைமை வரும் பொழுது ‘நம்மள யாரும் கவனிக்க வேண்டாமா’ என்ற சிந்தனையின் மூலம் மனிதநேயத்தை வெளிப்படுத்தியுள்ளார் நாவலாசிரியர். இவ்வாறு நாவலாசிரியர் பல்வேறு நிகழ்வுகளின் வாய்லாகப் பல்வேறு பாத்திரங்களின் வாய்லாக மனிதநேயச் சிந்தனைகளைச் சமூகத்திற்கு உணர்த்தியுள்ளார் என்பதை இவ்வாய்வுக் கட்டுரையின் வழியாகக் கண்டறியப்பெற்றுள்ளது.

## முடிவுரை

சங்க இலக்கியங்களில் மட்டுமல்ல. நவீன இலக்கியங்களிலும் அஃறிணைப் பொருட்களை உயர்திணைப் பொருட்களாக மனிதநேயத்துடன் காணவேண்டும் என்பதை இவ்வாய்வுக் கட்டுரை உணர்த்துகின்றது. தமிழர்கள் அரசு சொத்துக்களின் மீதும், தனியார் சொத்துக்களின் மீதும் அக்கறையும் கரிசனமும் கொள்ளவேண்டும். அவர்கள் மகத்தான பொறுப்புடையவர்களாக, நேர்மையும் மனிதநேயமும் கொண்டவர்களாக விளங்கவேண்டும் என்பதை அமெரிக்கர்களின் வாழ்வியலைக் காட்டி வலியுறுத்துகிறது. நேரத்தின் அருமை என்பதைவிட உயிரின் அருமை மிகவும் முக்கியமானது என்பதை இக்கட்டுரை புலப்படுத்துகின்றது. தனிமனித ஒழுக்கம் தமிழர்களிடம் காணப்பெறுவதில்லை என்பதை இவ்வாய்வுக் கட்டுரை வழி புலனாகின்றது. பொது மக்களுக்காக உழைக்கின்றவர்களைப்

போற்றவேண்டும் பணிபுரியும் இடங்களில் மனிதநேயத்துடன் செயல்படவேண்டும் என்பதை இவ்வாய்வுக் கட்டுரை வலியுறுத்துகின்றது. மனிதன் தன் வாழ்க்கையில் இறைப்பணி செய்யவேண்டும் என்பதைச் சுட்டுகின்றது. நண்பர்கள் கஷ்டப்படும் காலங்களில் அவர்களுக்குத் தானாக முன் வந்து உதவிவிட்டு அவர்களிடமிருந்து பிரதிப்பலனை எதிர்பார்க்கக்கூடாது. அடுத்தவர்களாக இருந்தாலும், பெற்றத் தாயாக இருந்தாலும் நியாயம் எது என்பதைப் பார்த்துச் செயல்படவேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்பெற்றதுள்ளது. இவ்வாறு நாவலாசிரியர் பல்வேறு நிகழ்வுகளின் வாய்லாகப் பல்வேறு பாத்திரங்களின் வாய்லாக மனிதநேயச் சிந்தனைகளைச் சமூகத்திற்கு உணர்த்தியுள்ளார் என்பதை இவ்வாய்வுக் கட்டுரையின் வழியாகக் கண்டறியப்பெற்றுள்ளது.

## References


Balakumaran (2016) Thunai, Visa Publications, Chennai, India

Balasubramaniyan, (2007) Natrinai, New Century Book House, Chennai, India

Mathiyazhagi, S. (2016) Ilakiyathil Manithaneyam, Panmuga Nokkil Tamil Ilakiyangal, Padmavani Arts & Science College for Women, Salem, India



**Funding:** No funding was received for conducting this study.


**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License